**<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்</u>**

**<u>O.S.No.243/2022</u>**

வாதி சாட்சி 1 கஸ்தூாி க/பெ.முருகன்

08.04.2025 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திரு.பிரமிளா தேவி, Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

I.A.No.8/2025 மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் வாதி சாட்சி 1 கஸ்தூாி திரும்ப அழைக்கப்பட்டு கூடுதல் முதல் விசாரணை தொடர்ச்சி :

1. 16.10.1942 தேதியில் சாமிகண்ணு என்பவருக்கு பெரியபையன் மற்றும் அவா் குமாரா் முத்துராடன் ஆகியோா் எழுதி கொடுத்த கிரைய பத்திரம் பிரெஞ்ச் மொழியில் உள்ளது True Image மற்றும் அதன் தமிழாக்கம் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ.14.

1ம் பிரதிவாதி தரப்பில் கூடுதல் குறுக்குவிசாரணை

ஏற்கனவே என்னை விசாாித்தபோது நான் பூா்விக சொத்து எதுவும் இல்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல, பூா்விக சொத்து உள்ளது என்று தான் கூறினேன். இந்த தாவா சொத்து 3ம் பிரதிவாதி ஜெயசந்திரன் பெயாில் கிரையம் உள்ளது என்றால் சாிதான், ஆனால் எங்கள் பூா்விக சொத்தை விற்று என் அண்ணன் ஜெயச்சந்திரன் பெயாில் இந்த சொத்து கிரையம் வாங்கினோம். வா.சாஆ.14 சாமிகண்ணு பெயாில் உள்ள கிரைய பத்திரம் எதற்காக தாக்கல் செய்கிறேன் என்றால் சாமிகண்ணு என் தாத்தாவின் அண்ணன், எங்களுக்கு பூா்விக சொத்து இருந்தது என்பதை காட்ட அந்த ஆவணம் தாக்கல் செய்கிறேன். 1942ம் ஆண்டு ஏற்பட்ட வா.சாஆ.14 கிரைய பத்திரத்தில் உள்ள சொத்து இப்போது உள்ளதா என்றால் உள்ளது. வா.சா.ஆ.12 செட்டில்மெண்ட் பத்திரம் இந்த வழக்கிற்கு எந்த வகையில் சம்மந்தப்பட்டது என்றால் என் தாத்தா ஆனந்தன் மற்றும் பெரியப்பா, அப்பா, சித்தப்பா ஆகியோா் சோ்ந்து என் சின்ன சித்தப்பா ராமானுஜம் அவருக்கு அந்த தான செட்டில்மெண்ட்

பத்திரத்தை எழுதி கொடுத்துள்ளார்கள் அது பூர்விக சொத்து உள்ளதை காட்டுகிறது. அலமேலு என்பவர் யார் என்றால் என் சின்ன அத்தை. அவர் பெயரில் உள்ள வா.சாஆ.13 தான செட்டில்மெண்ட் பத்திரம் பூர்விக சொத்து உள்ளது என்பதை காட்ட தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். என் தாத்தா ஆனந்தன் அவருடைய சொத்துக்கள் முழுவதையும் கிரைய பத்திரங்க்ள மூலமாகவும் செட்டில்மெண்ட பத்திரம் மூலமாகவும் எழுதிகொடுத்துவிட்டார் என்றும் அவருக்கு வேறு சொத்து எதுவும் இல்லை என்றால் சரியல்ல. என் தாத்தா ஆனந்தன் என் அப்பாவிற்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளாரா என்றால் ஆமாம். அதனால் பூர்விக சொத்துக்கள் எதுவும் கிடையாது என்றும் எனக்கு சொத்தில் பாகம் கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் ஆவணங்களுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

(3ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் மேற்படி 1ம் பிரதிவாதி தரப்பு கூடுதல் குறுக்குவிசாரணையை 3ம் பிரதிவாதியும் ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தார், அது பதிவு செய்யப்பட்டது)

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.